unused land from Wimco and making it over to this industry in the interest of the caustic soda industry in our State?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: விம்கோ நிறுவனத்தினர் நீண்ட நாட்களுக்கு முன்னால் ஏராளமான நிலத்தைக் கொடுத்திருந் தார்கள். இந்த அரசாங்கம் பொறுப்பேற்றவுடன் அவர்கள் நம்மிடத்திலே நிலங்களைக் கொடுத்தார்கள். அதை எப்படிப் பண் பாடு செய்வது என்று யோசனை செய்து வருகிறோம். விம்கோ நிறுவனத்தினர் இன்னொரு நிர்வாகத்தின் மூலமாக இன்னொரு தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு அனுமதி கேட்டிருக்கிறார்கள். அந்த அனுமதியும் கொடுப்பது என்று அரசு யோசித்து வருகிறது.

D.C.R. Unit at Vyasarpadi

* 248 Q.—Thiru R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether a workshop of D.C.R. Unit, Public Works **Department is situated at Vyasarpadi, Madras;**

(*b*) whether that workshop is registered under Factories Act;

(*c*) whether that workshop is maintained in accordance with the provisions of the Act; and

(*d*) the present status of the workshop and its functions?

டி.சி.ஆர். பணிமனை, வியாசர்பாடி

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) பொதுப் பணித் துறையின் டி.சி.ஆர். பிரிவுக்கான பணி மனை ஒன்று சென்னை வியாசர்பாடியில் உள்ளதா?

(இ) அப்பணிமனை தொழிற்சாலைகளின் சட்டப்படி பதிவு செய்யப்பட்டதா?

(உ) அப்பணிமனை சட்டப்படி இருக்க வேண்டிய நிலையில் வைத்து பராமரிக்கப்பட்டு வரப்படுகிறதா?

(எ) அதன் தற்போதைய நிலை என்ன? பணி என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ), (இ) & (உ) ஆம்.

1972 ஆகஸ்ட் 24]

(எ) தொழிற்சாலை சட்டப்படி இருக்க வேண்டிய நிலையில் வைத்தே இதுகாறும் பராமரிக்கப்பட்டு வருகிறது. அரசிற்குச் சொந்தமான கனரக இயந்திரங்கள் பழுது பார்க்கும் பணி அத் தொழிற்சாலையில் நடைபெறுகிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: பணிமனைக்குச் செல்லுகிற வர்கள் போக முடியாதவாறு ஏராளமான முட் புதர்கள் முளைத்து அந்தப் பணிமனைப் பகுதியில் பாம்புகள் திரியும் சீர்கேடான முறை யில் இருப்பதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்தன. அதை அரசு ஆராயுமா? இப்போது அந்தச் சீர்கேடுகள் எல்லாம் நீக்கப்பட் டிருக்கின்றனவா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: அப்படிச் சீர்கேடு இருப்பதாகத் தகவல் இல்லை. இந்த நிறுவனம் 1—1—1967-லிருந்து பேக்டரி ஆக்ட்படி ரிஜிஸ்டர் செய்யப்பட்டு நடைபெற்று வருகிறது.

Road Bridge Across the Pamban Channel

*249 Q.—THIRU M. RAJAH IYER: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) when the construction of the road bridge across the Pamban Channel is to commence and when it is expected to be completed; and

(b) the estimated cost of the scheme?

பாம்பன் கால்வாய்க்குக் குறுக்கே சாலைப் பாலம்

திரு. எம். ராஜா அய்யர்: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) பாம்பன் கால்வாய்க்குக் குறுக்கே சாலைப் பாலம் கட்டும் பணி எப்பொழுது தொடங்கும்? அப்பணி எப்பொழுது முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது?

(இ) இத்திட்டத்திற்கான மதிப்பீட்டுச் செலவு எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஒப்பந்தப் புள்ளிகள் (tenders) இப்போது தயார் ஆகிறது. அதன் மேல் முடிவெடுக்க சுமார் ஆறுமாத காலம் ஆகலாம். அதன்பிறகு இப் பணி முடிவுபெற சுமார் மூன்று ஆண்டு காலம் பிடிக்கும்.

(இ) ரூ. 532.87 லட்சம்.